| DISTRICT LEVEL ANTI RAGGING COMMITTEE<br>ARIYALUR DISTRICT. | | |
|---|---|---|
| President | District Collector, Ariyalur. | 9047992233 |
| Member | Superintendent of Police,<br>Ariyalur. | 9442233577 |
| Member Secretary | District Revenue Officer,<br>Ariyalur. | 9442175324 |
| Local Media Person | Thiru.S.Thalapathy,<br>Media Reporter | 9443129179 |
| Other Members | 1.Dr.N.Subramanian Dean (i/c)<br>University College of<br>Engineering, Ariyalur. | 9965630370 |
| | 2.Dr.V.Karunakaran,<br>Asst.Professor & NSS PO<br>Govt.Arts College, Ariyalur. | 9159995699 |
| Representatives of<br>All Students<br>Organizations | 1.Selvan.M.Sundar,<br>Final Year ECE.<br>University College of<br>Engineering, Ariyalur. | 9791605321 |
| | 2.Selvan.T.Saravanan,<br>II$^{nd}$ Year Mechanical<br>Engineering.<br>University College of<br>Engineering, Ariyalur. | 7708634228 |
| Help line Numbers | Land line (SP Office, Ariyalur) | 04329-222106 |
| | Mobile (SP Office, Ariyalur) | 9498100705 |
| | Toll–free Number | 1800-180-5520 |

ஒம்/-டி.ஜி.வினய்,

மாவட்ட ஆட்சித் தலைவர்,
அரியலூர்.

//உத்தரவுப்படி//

ந.க.சி3 / 198 /2018 மாவட்ட ஆட்சியரகம்,
நாள்: 29.08.2019 அரியலூர்.

## கூட்ட நடவடிக்கை குறிப்புகள்

அரியலூர் மாவட்டத்தில் உள்ள கல்வி நிறுவனங்களில் ராகிங் நடைபெறுவதை தவிர்க்கும் பொருட்டு 2019 -ஆம் ஆண்டிற்கு மாவட்ட அளவிலான குழு அமைப்பது தொடர்பாக கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் 22.08.2019 அன்று காலை 10.00 மணியளவில் மாவட்ட சிறுகூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட அலுவலர்கள் மற்றும் கல்லூரி பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

1. மாவட்ட காவல் கண்காணிப்பாளர், அரியலூர்.
2. மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது), அரியலூர்.
3. மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர், அரியலூர்.
4. மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர், ஜெயங்கொண்டம்.
5. வருவாய் கோட்டாட்சியர், அரியலூர்.
6. வருவாய் கோட்டாட்சியர், உடையார்பாளையம்.
7. உதவி மக்கள் செய்தி தொடர்பு அலுவலர், அரியலூர்.
8. பிரிதிநிதி, அரசு கலைக் கல்லூரி, அரியலூர்.
9. பிரிதிநிதி, K.K.C கல்வி நிறுவனங்கள், ஜெயங்கொண்டம்.
10. பிரிதிநிதி, மீனாட்சி இராமசாமி பொறியியல் கல்லூரி, தத்தனூர்.
11. பிரிதிநிதி, மீனாட்சி இராமசாமி கலைக்கல்லூரி, தத்தனூர்.
12. பிரிதிநிதி, மார்டன் கலைக்கல்லூரி, ஜெயங்கொண்டம்.
13. பிரிதிநிதி, நேஷனல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஜெயங்கொண்டம்.
14. முதல்வர், நெல்லியாண்டவர் பொறியியல் கல்லூரி, அரியலூர்.
15. பிரிதிநிதி, பொறியியல் கல்லூரி, அரியலூர்.
16 உறுப்பினர், ராகிங் தடுப்பு குழு

### ராகிங் தடுப்பு தொடர்பாக விவாதிக்கப்பட்ட பொருள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விபரம்:-

| வ. எண் | விவாதிக்கப்பட்ட பொருள் | எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|
| 1. | விளம்பரப் பலகை அமைத்தல் | பல்கலைக்கழகம் மற்றும் கல்வி நிறுவனங்களில் ராகிங் நடைபெறுவதை தடுக்கும் பொருட்டு விளம்பரப் பலகை அமைத்திடுமாறும் மேலும் உள்ளூர் காவல் துறையினரின் தொலைபேசி எண்களை அனைவரும் அறியும் வண்ணம் விடுதி மற்றும் கல்லூரி தகவல் பலகைகளில் வைத்திட மாவட்ட ஆட்சித் தலைவரால் தெரிவிக்கப்பட்டது. |
| 2. | புகார் பெட்டி அமைத்தல் | பல்கலைக்கழகம் மற்றும் கல்வி நிறுவனங்களில் ராகிங் நடைபெறுவதை தடுக்கும் பொருட்டு புகார் பெட்டி அமைக்கப்பட்டுள்ளதாக அனைத்துக் கல்லூரி நிறுவனத்தினரால் தெரிவிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 3. | கண்காணிப்பு குழு அமைத்தல் | 2019-ஆம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான ராகிங் கண்காணிப்பு குழு பல்கலைக்கழகங்கள் / கல்வி நிறுவனங்களில அமைத்திடுமாறும், அக்குழு உறுப்பினர்கள் பற்றிய விபரத்தினை அனைத்து மாணாக்கர்களும் அறியும் பொருட்டு அறிவிப்பு பலகை மற்றும் மாணாக்கர்களின் விடுதி ஆகியவற்றில் வைத்திடுமாறு மாவட்ட ஆட்சித் தலைவரால் தெரிவிக்கப்பட்டது. |
| 4. | கட்டணமில்லா தொலைபேசி எண் மற்றும் இணையதள முகவரி பற்றிய விபரங்களை குறிப்பிடுதல் | ராகிங் தொடர்பான புகார்களை தெரிவிக்க ஏதுவாக, மாணவ, மாணவிகளின் அடையாள அட்டையில், கட்டணமில்லா தொலைபேசி எண். 1800-180-5520 மற்றும் இந்திய அரசின் இணையதள முகவரி மற்றும் அரசின் முகவரி போன்ற விபரங்களை குறிப்பிடுமாறு மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவுறுத்தப்பட்டது.<br>மேலும் விடுதிகளில் அனைவரும் அறியும் வண்ணம் தற்கொலை தடுப்பு குறித்த கட்டணமில்லா தொலைபேசி எண்ணை வைத்திட தெரிவிக்கப்பட்டது. |
| 5. | செய்தித் தாள் விளம்பரம் செய்தல் | பல்கலைக்கழகம் மற்றும் கல்வி நிறுவனங்களில் ராகிங் நடைபெறுவதை தடுக்கும் பொருட்டு சட்ட விதிமுறைகளினை சுட்டிக் காட்டி செய்தித் தாள் விளம்பரம் செய்திடுமாறு மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவுறுத்தப்பட்டது. |
| 6. | விழிப்புணர்வு விளம்பரங்கள் ஏற்படுத்துதல் | கல்வி நிறுவனங்களில் ராகிங் தொடர்பான விழிப்புணர்வு விளம்பரங்கள் அனைவரின் பார்வைக்கும் வைத்திடுமாறு மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவுறுத்தப்பட்டது. ராகிங் ஈடுபடுவேற்கு 2 ஆண்டு கால சிறைத்தண்டனை வழங்கப்படும் எனவும், மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவுறுத்தப்பட்டது. |
| 7. | சட்ட விழிப்புணர்வு முகாம் ஏற்படுத்துதல் | பல்கலைக்கழகங்கள் / கல்வி நிறுவனங்களில் ராகிங் தடுப்பு குறித்து முகாம் ஏற்படுத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவுறுத்தப்பட்டது. கல்லூரியில் உள்ள அனைத்து பணியாளர்கள் மற்றும் மாணாக்கார்கள் அனைவரையும் தலைக்கவசம் கட்டாயம் அணிய வேண்டும் எனவும்,18 வயதிற்கு உட்பட்ட யாவரும் இரு சக்கர வாகனங்களில் வர அனுமதி தரக்கூடாது மற்றும் மாணாக்கர்கள் சாலை விதிகள் மற்றும டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு முகாம்களில் கலந்து கொள்ள வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவுறுத்தப்பட்டது. |
| 8. | யோகா, தியானம் மற்றும் ஆலோசனை குழு மூலம் ஆலோசனைகள் வழங்குதல் | கல்வி நிறுவனங்களில் யோகா, தியான வகுப்புகள் நடத்தி மாணாக்கர்களை பங்குபெறச் செய்திடவும், மற்றும் தகுதியான நபர்களைக் கொண்டு மாணாக்கர்களுக்கு ஆலோசனைகள் வழங்குதல் மூலமாக ராகிங் நடைபெறுவதை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்திடுமாறும் அவ்வாறு நடத்தப்படும் நிகழ்ச்சிகளில் வருவாய் துறை மற்றும் காவல்துறை அலுவலர்களை |

| | | |
|---|---|---|
| | | கொண்டு நடத்திடுமாறும் மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவுறுத்தப்பட்டது. |
| 9. | பல்கலைக்கழகம்/ கல்வி நிறுவன விடுதிகளில் ஆய்வு செய்திடல் | பல்கலைக்கழகம் மற்றும் கல்வி நிறுவன தங்கும் விடுதிகளில் ராகிங் தொடர்பாக அடிக்கடி ஆய்வு செய்திட அனைத்து கல்லூரி முதல்வர்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவரால் தெரிவிக்கப்பட்டது. |
| 10. | கண்காணிப்பு கேமரா அமைத்திடல் | கல்வி நிறுவனங்களில் உரிய இடங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்திட தக்க நடவடிக்கை எடுத்திடுமாறு மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவுறுத்தப்பட்டது. |

ஒம்/-டி.ஜி.வினய்,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
அரியலூர்.

//உத்தரவுப்படி//

மாவட்ட ஆட்சியருக்காக.

**பெறுநர்**

தொடர்புடைய நபர்கள்

**நகல்:**

அரசு இணை செயலர்,
மேல்நிலை கல்வி(G1) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-09.